## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C)

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, RANIPET

Case No. **SC.No.329/2023**
Prosecution: **PW3**

**Deposition of the witness of LW3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | திரு.ரவிச்சந்திரன் | **District** | திருப்பத்தூர் |
| **Father's Name** | திரு.கேசவன் | **Calling** | காவல் சிறப்பு உதவி ஆய்வாளர், உமராபாத் காவல் நிலையம் |
| **Age** | 52 | **Religion** | -- |
| **Village/Town** | உமராபாத் | **Caste** | -- |
| **Taluk** | ஆம்பூர் | **ID Card No.** | 183723 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of April 2025.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது திருப்பத்தூர் மாவட்டம் உமராபாத் காவல் நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு இராணிப்பேட்டை மது விலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணியிலிருந்த போது கடந்த 25.11.2017-ம் தேதி காவல் ஆய்வாளர் திரு.சீ.சுப்பிரமணி அவர்கள் தலைமையில் காவல் உதவி ஆய்வாளர் திருமதி.ஜெயலட்சுமி, தலைமை காவலர்கள் நானும் என்னுடன் லாரன்ஸ், ரூமேதா மற்றும் ரமாபாய் ஆகியோர் சகிதம் மது விலக்கு அமலாக்கம் சம்மந்தமாக வாலாஜா காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கோவிந்தச்சேரி குப்பம் ஏரிகரையிடம் கண்காணிப்பு பணியில் ஈடுபட்ட போது எங்களை பார்த்ததும் ஒரு பெண்மணி ஓட முயற்சித்தார். அவரை வளைத்து பிடித்து விசாரித்த போது அவர் தன் பெயர் அமுதா என்றும், கணவர் பெயர் குமார் என்றும், தலங்கை காலணி, வாலாஜாப்பேட்டை என்று கூறினார். அவர் கையில் வைத்திருந்த பிளாஸ்டிக் பைகளை சோதனை செய்த போது 35 லி கொள்ளளவு கொண்ட 3 பிளாஸ்டிக் பைகளில் சுமார் 105லி நாட்டுசாராயம் இருந்தது தெரிய வந்தது. அது குறித்து விசாரித்த போது அவர் ஆந்திர மாநிலம் ஐயன் கண்டிகை பகுதியில் பெயர், விலாசம் தெரியாத நபரிடம் நாட்டு சாராயத்தை விற்பனைக்காக வாங்கி

வைத்திருந்தை ஒப்புக்கொண்டார். அவரை காவல் ஆய்வாளர் காரணம் கூறி கைது செய்தார். அவர் தானாக முன்வந்த கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அந்த நேரத்தில் அங்கு இருந்த தனிநபர் சாட்சிகளான தியாகராஜன் மற்றும் தேவராஜ் ஆகியோர் முன்னிலையில் ஆய்வாளர் பதிவு செய்து கொண்டார். அதே சாட்சிகள் முன்னிலையில் பகல் 12.45 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் 3 பிளாஸ்டிக் பைகளில் இருந்த சுமார் 105 லி நாட்டு சாராயத்தை மகசரில் கைப்பற்றினார். கைப்பற்றிய நாட்டு சாராயத்தில் வாடை வீசியதால் மனித உயிருக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய நச்சுப்பொருள் கலந்திருக்கலாம் என கருதி ரசாயன பரிசோதனைக்கு அனுப்ப வேண்டி 750 ml கொள்ளளவு கொண்ட இரண்டு கண்ணாடி பாட்டில்களில் தலா 500ml மாதிரிக்கு எடுத்துக்கொண்டார். எஞ்சியிருந்த நாட்டுச்சாரயத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் 13.00 மணியளவில் அழிப்பு மகசர் தயார் செய்து, யாருக்கும் பயன்படாத வகையில் சம்பவ இடத்தில் கொட்டி அழிக்க ஆய்வாளர் நடவடிக்கை மேற்கொண்டார். வழக்கு சொத்துகளான மாதிரிக்கு எடுத்துக்கொண்ட நாட்டு சாராயம் கொண்ட இரண்டு கண்ணாடி பாட்டில்கள் மற்றும் கைது செய்யப்பட்ட எதிரியுடன் நிலையம் சேர்ந்து 14.00 மணியளவில் எதிரி மீது வழக்கு பதிவு செய்து ஆய்வாளர் நடவடிக்கை மேற்கொண்டார். ஆய்வாளரின் இந்த நடவடிக்கைகளின் போது நான் அவருக்கு உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

இராணிப்பேட்டை மது விலக்கு அமலாக்கப் பிரிவு அமைந்துள்ள வாலாஜாப்பேட்டை தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பிலிருந்து சம்பவ இடம் சுமார் 10 கி.மீ தூரத்தில் உள்ளது. காவல் ஆய்வாளர் அவரது அரசு ஜீப்பில் இரண்டு பெண் தலைமை காவலர்களுடன் வந்தார். அவர் தவிர பெண் உதவி ஆய்வாளர் தனியாக ஒரு மோட்டார் சைக்கிளில் வந்தார். நானும், தலைமை காவலர் லாரான்ஸ் என்பவரும் சேர்ந்து ஒரு மோட்டார் சைக்கிளில் சேர்ந்தோம். சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் காவல் ஆய்வாளர் வரையவில்லை. என் முன்னிலையில் எதிரியிடமிருந்து விஷ மருந்து பாட்டில் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். சாராயம் வைத்திருந்ததாக சொல்லப்படும் மூன்று பிளாஸ்டிக் கவர்களை சம்பவ இடத்திலேயே அழித்துவிட்டோம். மூன்று பிளாஸ்டிக் கவர்களிலும் இருந்த நாட்டு சாராயத்திலிருந்து தனித்தனியாக மாதிரிக்கு எடுக்கவில்லை. மூன்று பிளாஸ்டிக் கவர்களிலும் இருந்த நாட்டு சாராயத்திலிருந்து சிறிதளவு எடுத்து இரண்டு பாட்டில்களில் மாதிரிக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. கைப்பற்றுதல் மகசர், அழிப்பு மகசர், படிவம் 91, எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் அனைத்தும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததற்கு முன்னர் தயாரிக்கப்பட்டதா அல்லது பின்னர் தயாரிக்கப்பட்டதா என்றால் வழக்கு பதிவு செய்வதற்கு முன்பே தயாரிக்கப்பட்டது. எதிரியிடமிருந்து எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் தனிநபர் சாட்சிகள் முன்னிலையில் பெறப்படவில்லை

என்றாலும் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், மேல் அதிகாரிகளுக்கு பவ்யப்பட்டு போடப்பட்ட பொய் வழக்கில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

(S/d).A.Balakrishnan
Assistant Sessions Judge/Chief Judicial Magistrate,
Ranipet.